# ஆற்காடு நகராட்சி

2025 டிசம்பர் மாதம் 29ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்ட கூட்டத்தின் உண்மை நகல்.

## மன்றப்பொருள்

**பொருள் எண் .01)**

நகராட்சி ஆணையாளரின் நவம்பர் 2025ம் மாதந்திர கூட்ட நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அ. கு. :– 1) மன்றம் பதிவு செய்யலாம்.

ந. க. எண்.1880/2023/சி1,

தீர்மானம் எண்.282, நாள் : 29.12.2025.

மன்றம் பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண் .02)**

நகராட்சி பொறியாளர் பொறுப்பு அவர்களின் நவம்பர் 2025ம் மாதந்திர கூட்ட நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ. கு. :– 1) மன்றம் பதிவு செய்யலாம்.

ந. க. எண்.0665/2018/சி1,

தீர்மானம் எண்.283, நாள் : 29.12.2025.

மன்றம் பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண் .03)**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.17380/2022/SBM2. நாள்.21.06.2023 மற்றும் 05.06.2024ல் தூய்மை இந்தியா திட்டம் 2.0 (நகர்புறம்) திட்டத்தின் கீழ் தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு தொலைபேசி உதவி மையம் அமைக்க தேவையான பணியாட்கள் வெளிகொணர்வு முகமை அடிப்படையில் நியமிக்க உத்திரவிடப்பட்டுள்ளது. இதன்படி மேல்விஷாரம் நகராட்சியின் பதிவுப்பெற்ற ஒப்பந்த்தாரரான JNS Enterprise நிறுவனத்தின் மூலம் பணி உத்திரவு வழங்கப்பட்டு தேவையான பணியாட்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியாளர்களுக்கு 03.09.2025 முதல் 31.08.2026 வரையிலான ஒரு வருட காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1076/2023/அ3. நாள்.03.09.2025ல் பணியாளர்களுக்கான ஒரு வருட ஊதியத்தொகை ரூ.5.00 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டு முதல் நிலை நகராட்சி பங்களிப்பு தொகையாக ரூ.25,000/-ஐ ECS வழியாக ஆணையாளர், மேல்விஷாரம் நகராட்சிக்கு அளிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2025-2026ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்ன்னுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0239/2023/எச்1)

தீர்மானம் எண்.284, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் .04)

ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் மற்றும் வரியில்லா இனங்களின் கீழ் உள்ள கடைகளுக்கான மாத வாடகையுடன் சேர்த்து பெறப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரித் தொகையினை 2018-2019 முதல் 2023-2024 வரை செலுத்தாத காரணத்தினால் மாநில சரக்கு மற்றும் சேவை வரி அலுவலகம் மூலம் நகராட்சி அலுவலகத்தில் திடிர் ஆய்வு மேற்கொண்டு மேற்படி ஆண்டுகளுக்கு குத்தகை மூலம் கடையின் குத்தகைதார்களிடம் பிரதி மாதம் வசூலிக்கப்படும் வாடகை தொகையில் 18% விழுக்காடு சரக்கு மற்றும் சேவைவரி வசூலிக்கப்பட்டதை உரிய அரசு கணக்கில் செலுத்தப்படவில்லை என தெரிவித்து உடன் தொகை செலுத்த அறிவிப்பு வழங்கப்பட்டதன் அடிப்படையில் நகராட்சி அலுவலகம் மூலம் வாடகையில் வசூலிக்கப்பட்ட 18% விழுக்காடு சரக்கு மற்றும் சேவைவரி தொகை அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. அதனால் தற்போது சரக்கு மற்றும் சேவைவரி அலுவலக 17.09.2025ந் தேதிய உத்திரவில் நகராட்சி மூலம் செலுத்திய தொகை 100% விழுக்காடு முழுவதும் பிரிவு 74ன்படி வட்டியாகவும், மேலும், அபராத வட்டி சேர்த்து செலுத்த ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, தற்போது போதிய நிதியிருப்பு நகராட்சியில் இல்லாத காரணத்தினால் சரக்கு மற்றும் சேவைவரித் துறை அலுவலகத்தில் 17.09.2025ந் தேதி ஆணையிடப்பட்டதை எதிர்த்து மேல்முறையீடு செய்ய நடவடிக்கை எடுக்க தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்துக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2025-2026ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்ன்னுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.02309/2023/பி1),

தீர்மானம் எண்.285, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .05)**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண். TN73E 0138 பழுதுகள் நிவர்த்தி செய்யும் பணிக்கு அங்கீகரிக்கப்பட்ட M/S Jain Cars & Auto Sales Pvt Ltd Vellore, TN73E0138 எண்படி நிறுவனத்தில் பழுதுகளை சரி செய்ய அனுமதியும் அதற்கு உண்டான தோராயச்செலவினத் தொகையான ரூ.49,224/- மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள TN73E 0138 ஈப்பு வாகனம் பழுதுகள் நிவர்த்தி செய்ய அங்கீகரிக்கப்பட்டநிறுவனமான Jain Cars & Auto Sales Pvt Ltd-இல் நிவர்த்தி செய்ய அவசர அவசியம் கருதி மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. ஈப்பு பழுதிற்கான செலவினத் தொகையினை 2025-2026 ஆம் ஆண்டு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 176/2023/எச்1,

தீர்மானம் எண்.286, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .06)**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண். TN73E 0155 பழுதுகள் நிவர்த்தி செய்யும் பணிக்கு அங்கீகரிக்கப்பட்ட M/S Jain Cars & Auto Sales Pvt Ltd Vellore, TN73E0155 எண்படி நிறுவனத்தில் பழுதுகளை சரி செய்ய அனுமதியும் அதற்கு உண்டான தோராயச்செலவினத் தொகையான ரூ.69,766/- மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள TN73E 0155 ஈப்பு வாகனம் பழுதுகள் நிவர்த்தி செய்ய அங்கீகரிக்கப்பட்டநிறுவனமான Jain Cars & Auto Sales Pvt Ltd–இல் நிவர்த்தி செய்ய அவசர அவசியம் கருதி மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. ஈப்பு பழுதிற்கான செலவினத் தொகையினை 2025–2026 ஆம் ஆண்டு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1889/2022/எச்1

தீர்மானம் எண்.287, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .07)**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள இலகுரக வாகனம் எண். TN73AK0605 என்ற வாகனம் பழுதுகள் நிவர்த்தி செய்யும் பணிக்கு அங்கீகரிக்கப்பட்ட TATA Motors நிறுவனமான Sekar Motors என்ற நிறுவனத்தில் பழுதுகளை சரி செய்ய அனுமதியும் அதற்கு உண்டான தோராயச்செலவினத் தொகையான ரூ.63,270/– மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள TN73AK0605 இலகுரக வாகனம் பழுதுகள் நிவர்த்தி செய்ய அங்கீகரிக்கப்பட்டநிறுவனமான Sekar Motors –இல் நிவர்த்தி செய்ய அவசர அவசியம் கருதி மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. ஈப்பு பழுதிற்கான செலவினத் தொகையினை 2025–2026 ஆம் ஆண்டு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2204/2024/எச்1,

தீர்மானம் எண்.288, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .08)**

ஆற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட சாம்பசிவன் தெரு, தோப்புகானா வில் வசிக்கும் திருமதி.மாலதி க/பெ பார்த்திபன் என்பவர் நகராட்சிக்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் W.P.No.10659/2025 வழக்கு தொடுத்துள்ளார். 26.03.2025 நாளில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்மீது அவமதிப்பு மனு எண்.3806/2025 வழக்கு தொடுத்துள்ளார். ஆற்காடு நகராட்சி சார்பில் திரு.B.ஆனந்த், வழக்கறிஞர் ஆஜராகி Vakalath & Written Statement counter filed செய்துள்ளார். அதற்கான செலவினத்தொகை ரூ. 20000/–ஐ வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி வழக்கிற்குண்டான செலவினத் தொகையினை வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் அவர்களுக்கு வழங்கவும் இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 0567/2025/எச்1,

தீர்மானம் எண்.289, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் .09)

இந்நகராட்சிக்கு சொந்தமான அலுவலக பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு வாகன காப்பீடு காலம் முடிவடைவதால் அதற்கு 2025-2026ஆம் வருடத்திற்குண்டான காப்பீடு சந்தா தொகையினை United India Insurance Co. Ltd, Ranipet என்ற அலுவலகத்தில் உரிய காலத்தில் செலுத்தப்பட வேண்டும். காப்பீடு தொகை செலுத்தப்பட வேண்டிய வாகனங்களின் விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | வாகனங்களின் விவரம் | காப்பீடு காலம் முடிவடையும் நாள் | காப்பீடு தொகை செலுத்தப்பட வேண்டிய தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | TN 73 AK 0624 (இலகுரக வாகனம்) | 30.10.2025 | ரூ.19779 |
| 2 | TN 73 AK 0697 (இலகுரக வாகனம்) | 30.10.2025 | ரூ.19779 |

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள இரண்டு அலுவலக பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய காப்பீடு தொகை ரூ.39,558/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

01. மன்றம் அனுமதி வழங்கலாம்.
02. அலுவலக பயன்பாட்டில் உள்ள TN 73 AK 0624. TN 73 AK ஆகிய வாகனங்களுக்கு காப்பீடு மேற்காணும் விவரப்படி முடிவடைவதால் காப்பீடு சந்தாவை செலுத்தி புதுப்பிக்க வேண்டி மன்றப் பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
03. இச்செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2188/2011/எச்1

தீர்மானம் எண்.290, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .10)**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.35599/2023/எம்ஏ1 நாள் 23.02.2024ல் நகரமன்ற தலைவர், நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி பிற அலுவலர்கள் ஆகியோர் அலுவலக பயன்பாட்டிற்கு வாகனங்கள் கொள்முதல் செய்யவும், வாகனங்களை பயன்படுத்துல் தொடர்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் முதல் நிலை நகராட்சிக்கு நகரமன்றத் தலைவருக்கு ஸ்கார்பியோ வாகனமும், நகராட்சி ஆணையாளர்/ நகராட்சிப் பொறியாளருக்கு பொலிரோ வானங்கள் கொள்முதல் செய்து பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆற்காடு நகராட்சி முதல் நிலை நகராட்சி என்பதால் அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று எண்ணிக்கை வாகனங்களில் நகரமன்றத்தலைவர், நகராட்சி ஆணையர், மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகிய மூவரும் பயன்படுத்தப்பட்டு வாகனங்களில் நகராட்சி ஆணையர் பயன்படுத்தும் பொலிரோ TN73 E 0138 வாகனம் 17.10,2012ம் தேதி கொள்முதல் செய்து 13 ஆண்டுகள் கடந்த நிலையில்சுமார் 5.00 இலட்சம் கிலோ மீட்டர் பயன்படுத்தப்பட்டுள்ளதாலும், ஆணையர் அலுவலக பணிக்கு பயன்படுத்த முடியாத நிலையில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் அந்த வாகனத்தை தகுதி நீக்கம் செய்து ஆணையர் பயன்பாட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு பொலிரோ வாகனம் ஒன்று புதியதாக கொள்முதல் செய்ய ஏற்படும் தோராய செலவினம் மதிப்பீட்டு தொகை ரு,20,00,000/ (ருபாய் இருபது இலட்சம் மட்டும்)க்கும், இ,ப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**

அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.176/2023/எச்1**

தீர்மானம் எண்.291, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .11)**

ஆற்காடு நகராட்சி – சட்டமன்றத் தேர்தல்கள் –2026 வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்–2026(S.I.R) தொடர்பாக, 04.11.2025 முதல் நடைபெற்ற சிறப்பு தீவிர திருத்தம் (S.I.R) பணியில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு பூர்த்தி செய்து அளிக்கப்பட்ட கணக்கீட்டு படிவம் (Enumeration forms) திரும்பப் பெறப்பட்டு BLO APP – ல் பதிவேற்றம் செய்திடவும், பணியின் கால அளவிற்க்குள் பணியை விரைவாக முடித்திட வேண்டும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களின் அறிவுரையின்படி, தினக்கூலி அடிப்படையில் BLO APP – ல் பதிவேற்றம் செய்யும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க தோராய செலவினம் ரூ.3,00,000/– மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. தேர்தல் பணியின் அவசர அவசரம் கருதி பணி மேற்கொண்டதையும், இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.
2. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.948/2016/எப்1),

தீர்மானம் எண்.292, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .12)**

தமிழ்நாடு அரசிதழ் அறிவிக்கை எண் 252, நாள்:02/06/2025 அறிவிக்கையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 37(1) (i-a)-இல் மேற்கொண்ட திருத்தங்களை செயல்படுத்த , திருத்தம் செய்யப்பட்ட சட்டப்பிரிவிற்கு உட்பட்ட விதிகள் மாற்றம் செய்யப்பட்டு உரிய வழிகாட்டுதல்கள் அரசாணை நிலை எண்:119 மற்றும் அரசாணை நிலை எண்:120 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்:26/06/2025-இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது இது சம்பந்தமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு சட்டம்,9/1999) தமிழ்நாடு சட்டம் 30/2025ன் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தம். பிரிவு 37(1)(i-a)-ன்படி மாற்றுத்திறனாளி நபர்களிடமிருந்து ஆற்காடு நகராட்சி மன்றத்திற்கு உறுப்பினராக நியமனம் செய்வதற்கு விண்ணப்ப படிவங்கள் https://tnurbantree.tn.gov.in/whatsnew என்ற இணையதள முகவரியில் 01.07.2025 முதல் 17.07.2025 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளவும், ஆற்காடு நகராட்சி எல்லைக்குள் வசித்து வரும் தகுதியான விண்ணப்பதாரர்கள், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை அளிப்பது சம்பந்தமாகவும் , தினகரன் தமிழ் நாளிதழ் மற்றும் Trinity mirror ஆங்கில நாளிதழ் ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டது .

மேற்காணும் தினகரன் தமிழ் நாளிதழ் விளம்பரங்களுக்கான தொகை ரூ . 3,570/- , KAL பப்ளிகேசன் (பி) நிறுவனமும் மற்றும் Trinity mirror ஆங்கில நாளிதழ் நிறுவனம் விளம்பரங்களுக்கான தொகை ரூ . 15,750/- கோரியுள்ளனர் . மேற்காணும் விளம்பரத் தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1588 /2025 / எப்1)

தீர்மானம் எண்.293, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் .13)

ஆற்காடு நகர அண்ணாசாலையில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலையிலிருந்து, ஆரணி செல்லும் சாலையில், கஸ்தூரி மார்க்கெட் கடை வீதியின் மத்தியில், கடந்த 08.04.1973 தேதியன்று 15 அடி உயரத்தில், அய்யன் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. ஆற்காடு நகருக்கு வியாபார ரீதியாக பொருட்களை கொள்முதல் செய்யவும், அரசு திட்டப் பலன்களை பெற அலுவலகங்களை அணுகவும், சுமார் 40,000–க்கும் அதிகமாக பொது மக்கள் வெளி ஊரிலிருந்து வந்து செல்கின்றனர். தற்போது, ஆற்காடு நகரின் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாகவும், கஸ்தூரி மார்க்கெட் கடை வீதிக்கு செல்லும் பொதுமக்களுக்கும் சென்று வருவதில் உள்ள சிரமங்களை குறைக்க , பாலாறு பாலம் அருகில் உள்ள ரவுன்டானாவிலோ அல்லது நகர மன்றத்தால் தெரிவிக்கும் பொது இடத்திலோ அய்யன் திருவள்ளுவர் சிலையை மாற்றி அமைக்க அனுமதி வழங்குமாறு, செயலாளர் , தமிழ் வளர்ச்சி மன்றம் "தமிழ்ச் செம்மல் " கவிஞர் . மா. சோதி ,ஆற்காடு என்பவர் கோரிக்கை மனு அளித்துள்ளார். ஆற்காடு நகர கஸ்தூரி மார்க்கெட் கடை வீதியின் மத்தியில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை மாற்றி அமைக்க கோருவது சம்பந்தமாக மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமான கண்ணன் பூங்கா தென்புற சுற்றுச்சுவரை ஒட்டி, பொதுமக்களுக்கும் , போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாமல் ,"தமிழ்ச் செம்மல் " கவிஞர் . மா. சோதி, ஆற்காடு அவர்களின் சொந்த செலவிலேயே , அய்யன் திருவள்ளுவர் சிலையை இடமாற்றம் செய்து இந்நகர மன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>( ந.க.எண். 3149/2025/எப்1),</u>

தீர்மானம் எண்.294, நாள் : 29.12.2025.

அய்யன் திருவள்ளுவர் சிலை 1973ம் ஆண்டு அமைக்கப்பட்டது சிலை அமைந்துள்ள இடம் நெடுஞ்சாலைக்கு துறைக்கு சொந்தமானது சிலையை அமைக்க நெடுஞ்சாலை துறையிடம் அனுமதி ஏதும் பெறப்பட்டதாக தெரியவில்லை இருப்பினும் அய்யன் திருவள்ளுவர் சிலை சிறப்பு செய்யும் விதமாக கண்ணன் பூங்கா நுழைவு வாயில் இடதுபுறம் 30அடி தள்ளி நெடுஞ்சாலையில் இருந்து பார்த்தல் திருவள்ளுவர் சிலை தெரியும் வண்ணம் சிலை அமைத்துக்கொள்ள இடம் ஒதுக்கி மன்றம் தீர்மானிக்கப்படுகிறது உச்சநீதிமன்ற தீர்ப்பில் நெடுஞ்சாலை துறை அனுமதி இல்லாமல் உள்ள சிலைகளை அகற்ற வேண்டும் என உத்தரவு விடப்பெற்றதை கருத்தில் கொண்டு சிலை அமைந்துள்ள இடம் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூராக உள்ளதை கருத்தில் கொண்டும் கண்ணன் பூங்காவில் அமைத்தும் கொள்ள அனுமதி அளித்து தீர்மானிக்கப்படுகிறது நடைப்பெற்ற நகரமன்ற கூட்டத்தில் கலந்து கொண்ட 22 நகரமன்ற உறுப்பினர்களில் 18 நகரமன்ற உறுப்பினர்கள் சிலையை மாற்றியமைக்க ஒப்புதல் அளித்துள்ளார் மிதமுள்ள 2, 05, 14. மற்றும் 28 ஆகிய 04 நகரமன்ற உறுப்பினர்கள் மட்டும் சிலையை மாற்றியமைக்க கூடாது என தீர்மானத்துக்கு ஏதிர்ப்பு தெரிவித்தனர் மூலம் பெரும்பான்மையான நகரமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதால் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

பொருள் எண் .14)

ஆற்காடு நகராட்சியில் உள்ள 30 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு வேப்பூர் பாலாற்று படுகையில் அமைந்துள்ள நீர் உறிஞ்சு கிணறுகளிலிருந்து நீர் உறிஞ்சப்பட்டு வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் உதவியுடன் நகராட்சி பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் நீரேற்றம் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது CGF திட்டத்தின் கீழ் Gallery அமைக்கும் பணிகள் முடிவு பெற்றுள்ளது. இதில் மின்மோட்டார்கள் 100 HP பொருத்திடவும், ஏற்கனவே உள்ள மின்மோட்டார்கள் இயக்க 350 KW திறன் கொண்ட புதிய Panel அமைக்க வேண்டியுள்ளதால், இப்பணிக்காக ரூ.18.32 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணியை குடிநீர் நிதியில் மேற்க்கொள்ளவும், நகரமன்றத்தின் அனுமதி பெற்று, இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.001220/2025/இ1,</u>

தீர்மானம் எண்.295, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் .15)

ஆற்காடு நகராட்சியில் வார்டு எண்.09 பகுதியில் அமைந்துள்ள தனபால் தெருவில் போதுமான கால்வாய் வசதி இல்லாத காரணத்தினால் மழைக்காலங்களில் அப்பகுதியில் உள்ள சாலையில் தண்ணீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படுவதாலும், விஷ பூச்சுகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளதாலும் பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் நலன் கருதி இப்பகுதியில் மழைநீர் நீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்காக ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணியை பொது நிதியில் மேற்க்கொள்ளவும், நகரமன்றத்தின் அனுமதி பெற்று, இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.001322/2025/இ1,</u>

தீர்மானம் எண்.296, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .16)**

ஆற்காடு நகராட்சி வார்டு எண்.15 – ல் அமைந்துள்ள குட்டைக்கார தெருவில் போதுமான கால்வாய் வசதி இல்லாத காரணத்தால் பருவமழைக்காலங்களில் மழைநீர் செல்ல இயலாத காரணத்தால், சாலைகளில் தண்ணீர் தேங்கி சுகாதார கேடு உண்டாகிறது என்று பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர். எனவே இப்பகுதியில் புதிய கால்வாய் அமைக்க வேண்டி அவசியம் உள்ளதால் இப்பணிக்கு ரூ.6.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்க்கொள்ளவும், நகரமன்றத்தின் அனுமதி பெற்று, இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், இப்பணியை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.001322/2025/இ1</u>

தீர்மானம் எண்.297, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .17)**

ஆற்காடு நகராட்சியில் உள்ள 30 வார்டுகளின் பொது மக்களுக்கு வேப்பூர் பாலாற்றில் அமைந்துள்ள உறிஞ்சு கிணறுகளின் மூலம் நீர் உறிஞ்சப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பருவமழை காலங்களில் பாலாற்றில் வெள்ள பெருக்கு ஏற்படும் போது, பைப்லைன்கள் அடித்து செல்லப்பட்டு சேதமாகிவிடுவதால், பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குதல் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனை தவிர்க்க வேண்டி CGF திட்டத்தின் கீழ் 240 m நீளத்திற்கு Pipe line Carrying Bridge அமைக்கப்பட்டது. ஆனால் இப்பணியில் கைப்பிடி சுவர் அமைக்க நிதி ஒதுக்கப்படவில்லை. இருபுறமும் எவ்வித பாதுகாப்பும் இல்லாத காரணத்தால் பணியாளர்களின் பாதுகாப்பு வேண்டி கைப்பிடி அமைத்தல் பணி அவசியமாகிறது. எனவே இப்பணியை ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்க்கொள்ளவும், நகரமன்றத்தின் அனுமதி பெற்று, இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.001220/2025/இ1,</u>

தீர்மானம் எண்.298, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .18)**

ஆற்காடு நகராட்சியில் உள்ள பொதுமக்களுக்கு வேப்பூர் பாலாற்று படுகையில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நீர் உறிஞ்சு கிணறுகளின் நீர் உறிஞ்சப்பட்டு, நகராட்சி பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் நீரேற்றம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பருவ மழைக்காலங்களில் பாலாற்றில் வெள்ள பெருக்கு ஏற்படும் நேரங்களில் பாலாற்றில் புதைக்கப்பட்ட பைப்லைன்கள் அடித்து செல்லப்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் தடை ஏற்பட்டு குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனை தவிர்க்க வேண்டி பாலாற்றில் 240m தூரத்திற்கு GCF திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகளில் column, Beams, Slab bottom பேன்றவற்றிற்கு பெயிண்ட் செய்திடவும், Cable அமைத்திடவும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே இப்பணிகளை குடிநீர் நிதியிலிருந்து ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்க்கொள்ளவும், நகரமன்றத்தின் அனுமதி பெற்று, இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.001220/2025/இ1,</u>

தீர்மானம் எண்.299, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .19)**

ஆற்காடு நகராட்சியில் அமைந்துள்ள 30 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு வேப்பூர் தலைமை நீரேற்று நிலையம், காசி விஸ்வநாதர் பம்பு, பெருமாள் கோயில் பகுதியில் அமைந்துள்ள நீர் உறிஞ்சு கிணறுகளின் மூலம் நீர் உறிஞ்சப்பட்டு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 எண்ணிக்கையிலான பொதுமக்களுக்கு குளோரினேசன் செய்யப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரை மாதந்தோறும் பகுப்பாய்வு செய்து அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் பகுப்பாய்வு செய்ய மாதிரி ஒன்றுக்கு ரூ.1652 என்று TWAD Borad, Vellore என்ற அரசு நிறுவனம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நகராட்சியின் மூலம் 15 எண்ணிக்கையிலான மாதிரிகளை சேகரித்து பகுப்பாய்வு செய்து அதன் அறிக்கை பெற மாதம் ஒன்றிற்கு ரூ.1652x15 =24,780 செலவாகும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.24,780x12=297,360 செலவாகும் என திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணியை நகரமன்றத்தின் அனுமதி பெற்று குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள உரிய கட்டணம் செலுத்தி TWAD Board, Vellore என்ற அரசு நிறுவனம் மூலம் இப்பணியை மேற்க்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.001220/2025/இ1,

தீர்மானம் எண்.300, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.20)

மாநகராட்சி, மற்றும் நகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவுக்கிணங்க, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.291431/2025/எச்3 நாள்.05.11.2025 – ன் படியும், அரசாணை 4(U) எண் 56 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.3) நாள்.21.11.2025 – ன் படியும் காலை உணவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் காலை உணவு வழங்கும் தூய்மை பணியாளர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை குறைவில்லாமல் ஏற்படுத்தி தர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே ஆற்காடு நகராட்சியில் பணிபுரியும் 225 எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு உணவு வழங்கும் மையங்கலான 1.அலுவலக வளாகம், 2.ஜானகி ராமன் பூங்கா, 3.கண்ணன் பூங்கா, மற்றும் 4.ஆரம்ப சுகாதார நிலையம், தோப்புகானா, பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், இருக்கை வசதிகள், கழிவறை வசதிகள், உணவு அருந்த தேவையான இடவசதிகள், மின்விசிறிகள், விளக்குகள், கை அலும்பும் இடம் வண்ணம் பூசுதல் போன்ற தேவைகளை ஏற்படுத்தி தர வேண்டியுள்ளதால், இப்பணிக்காக ரூ.9.90 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியை நகரமன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரவும், பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.001322/2025/இ1,

தீர்மானம் எண்.301, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் .21)

ஆற்காடு நகராட்சியில் சாலைகள் அமைக்கும் பணி மற்றும் கால்வாய் அமைக்கும் பணிகளின் போது பணிக்கு இடையூறாக இருந்த ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய மினிபவர் பம்ப் மற்றும் HPDE தொட்டிகளை அகற்றும் சூழல் ஏற்பட்டது. தற்போது அகற்றிய இடங்களில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மீண்டும் கட்டுமான பணிகளை (பெடஸ்டல், Platform) மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. எனவே இப்பணிகளை ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்க்கொள்ளவும், நகரமன்றத்தின் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரவும், குடிநீர் நிதியிலிருந்து இப்பணியை மேற்க்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.001220/2025/இ1,</u>

தீர்மானம் எண்.302, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் .22)

இந்நகராட்சி பொது பிரிவு, பொறியியல் பரிவு, இணையதள சேவை வேகம் குறைவாக உள்ளதால் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்தல் மற்றும் Video Conference Meeting போன்ற அத்யாவசிய பணிகள் மேற்க்கொள்ள சிரமமாக உள்ளதால் அதிவேக இணையதளமான Jio Internet இணைய சேவை பெற ஒரு வருட கட்டணமாக ரூ.47000+41760=88760/– ஓராண்டு கட்டணமாகும். இத்தொகையினை Jaig Communication உரிமையாளர் திரு.A.K.ஜெயசந்திரன் ஆற்காடு என்பவருக்கு செலுத்தவும் நகரமன்றத்தின் அனுமதி பெற்று இப்பணியின் செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இணையதள சேவை பணி மிக அவசியம் என்பதால் மன்றத்தின் அனுமதி பெற்று இச்செலவினத்தொகையான ரூ.88760/–யினை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.3087/2024/இ1,</u>

தீர்மானம் எண்.303, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் .23)

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் (KNMT) கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் – 2025–2026– ம் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட மேம்படுத்துதல் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணி தேவி நகர் பகுதியில் 5 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைய உள்ளதால் இவ்விடத்தின் மண்ணின் புவி தொழில் நுட்ப பரிசோதனை செய்ய ரூ.37760/– யும் மேற்க்கண்ட திட்டத்தில் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியின் Vetting of Structural Design Construction of OHT and Sump Charges, வழங்க ரூ.271400 ஆக மொத்தம் ரூ.309160/– யினை The Principal, TPGIT, Vellore. என்ற நிறுவனத்திற்கு வழங்க இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, இச்செலவினத்தை குடிநீர் நிதியில் வழங்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இச்செலவினத்தொகையான ரூ.309160/–யினை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.001220/2025/இ1,</u>

தீர்மானம் எண்.304, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் .24)

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30, கிளைவ் பஜார் பகுதியில் அமைந்துள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியில் கட்டிடங்கள் பராமரிப்பு மேற்க்கொள்ள வேண்டி தலைமை ஆசிரியர் அவர்களிடமிருந்து கோரிக்கை மனு வந்ததை கருத்தில் கொண்டும், ரூ.3.00 இலட்சத்தில் 22.10.2025 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.N.எழிலன் | 0.02 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s.SS & Co | 0.10 % மதிப்பீட்டை விட மிக குறைவு |

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.SS & Co ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டை விட 0.10 % சதவீதம் மிக குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி மேற்கண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம் .

<u>ந.க.எண்.001219/2025/இ1,</u>

தீர்மானம் எண்.305, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் .25)</u>

ஆற்காடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகரமன்றத்தின் கலந்தாய்வு கூட்டம் கட்டிடத்தில் தரைப்பகுதியில் Tiles அமைக்கும் பணிக்கு ரூ.3.00 இலட்சத்தில் 17.10.2025 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.N. எழிலன் | 0.17 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருவாளர்.M/s.இராஜாராம் & கோ | 0.14 % மதிப்பீட்டை விட குறைவு |

<u>அலுவலக குறிப்பு :–</u>

1. மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர்.M/s.இராஜாராம் & கோ ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டை விட 0.14% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி மேற்கண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>ந.க.எண்.001322/2025/இ1,</u>

தீர்மானம் எண்.306, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .26)**

ஆற்காடு நகராட்சி வார்டு எண்.22 – வேலூர் மெயின் ரோடு முதல் குறுக்கு தெரு பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு ரூ.5.20 இலட்சத்திற்கு 17.10.2025 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.N. எழிலன் | 0.05 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருவாளர்.M/s.இராஜாராம் & கோ | 0.03 % மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலக குறிப்பு :–

1. மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர்.M/s.இராஜாராம் & கோ ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டை விட 0.03% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி மேற்கண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம் .

ந.க.எண்.001322/2025/இ1,

தீர்மானம் எண்.307, நாள் : 29.12.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .27)**

